
03.10.2005

# போது



கடல் தந்த துயரம்
கரை சேர்ப்பார் யாரோ?
இடம் ஒன்றில் வீடு
எவர் இங்கே தருவார்?



எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

_ மகாகவி பாரதியார் _

விலை 10/=

ஆண்டுச் சந்தா 100/=

வெளியீடு :
PROFESSIONAL PSYCHOLOGICAL COUNSELLING CENTRE
BATTICALOA.

# போது

போது -7 இதழ்-42

ஆடி - ஆவணி 2005
தோற்றம் 5-5-1998

நிர்வாக ஆசிரியர்
(Managing Editor)
சுவாமிஜி
போல் சற்குணநாயகம்.யே.ச.

ஆசிரியர்
(Editor)
வாகரைவாணன்

நிர்வாகம்:
(Management)
சி.எம்.ஒக்கஸ்

பணிமனை:
உளநல உதவிநிலையம்,
15, வெபர் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி:
065-2222842

E-mail
ppcc@diamond.lanka.net

## வரலாற்றை மறவோம்

அறிவியலும் தொழில்நுட்பமும் ஆட்சி செய்யும் உலகம் இது.

இந்த ஆட்சியில்,அரிய பல விடயங்கள் காணாமல் போய்விட்டதாகவே தெரிகின்றது. அவற்றில் ஒன்று வரலாறு.

ஒவ்வொரு இனத்திற்கு மட்டுமன்றி, ஒவ்வொரு மனிதனுக்கும் வரலாறு உண்டு. வரலாறு ஓர் அற்புதமான கண்ணாடி. கடந்த காலத்தை இது அப்படியே காட்டும். நம்மை நாம் அறிய, விழித்தெழ, புதிய வழியில் நடைபோட இந்த வரலாறுதான் நமக்கு ஏற்ற துணை, இனிய நண்பன்.

### ஆசிரியர் பக்கம்

வரலாறு என்பது கதையல்ல. அது உண்மைச் சம்பவங்களின் உறைவிடம். நிகழ்காலத்தவராகிய நாம் இந்தச் சம்பவங்களை நெஞ்சில் நிறுத்தவேண்டும். அப்போதுதான் உறக்கத்திலிருக்கும் நாம் உயிர் பெற்று எழும்ப முடியும்.

ஓர் இனத்தின் வரலாறு அவ்வினத்தைச் சேர்ந்த தனி மனிதர்களை எழுச்சி கொள்ளச் செய்யும். அதே வேளை, தனி மனிதர் சிலரின் வரலாறு நாம் போற்றிப்

பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாகவே திகழ்கின்றது. (உ+ம் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா)

ஓர் இனத்திற்கு வரலாறு மிக முக்கியமானது. அதுவும் உரிமைக்காகப் போராடும் ஓர் இனம் தன்னை தனது தனித் தன்மையை அறிந்து கொள்ள உதவுவதுதான் இந்த வரலாறு! இனப்பற்றை,நாட்டுப்பற்றை நமது இதயத்தில் பதித்து விடுவதும் இந்த வரலாறுதான்!

மனித இனத்தின் விரோதியாகக் கணிக்கப்படும் ஹிட்லர் உலகம் முழுவதையும் ஆள வேண்டுமென்ற எண்ணத்தை அவன் மனத்தில் ஊன்றியது அவனது இனப்பற்றுத்தான். சர்வதிகார ஹிட்லரின் இந்த எண்ணத்திற்குச் சாவுமணி அடித்து, இங்கிலாந்தைக் காப்பாற்றச் சேர்ச்சிலுக்கு உதவியதும் அவரது இனப்பற்றும் நாட்டுப் பற்றும்தான். இது போன்றே நெப்போலியனின் நாட்டுப்பற்று ஐரோப்பாக் கண்டத்தையே உலுக்கி எடுத்தது. இப்படி இந்தப் பற்றுக்காகப் போராடியவர்கள்; இறந்தவர்கள் எத்தனையோ பேர்.

தனித்துவம் (INDIVIDUALITY) ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இதனை இழக்கும் போது அவன் தன்னையே இழந்து விடுகின்றான். இது போன்றது தான் ஓர் இனமும். எனவே, உலகளாவிய (Universal) சிந்தனை, தனித்துவத்தை இல்லாமல் செய்துவிடும் என்பது வெளிப்படை. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனும் கணியன் பூங்குன்றனாரின் கருத்து கவனத்தோடு அணுகப்படவேண்டியதொன்று. ஒருவேளை, பூங்குன்றனாரின் ‘உலகம்’ தமிழகமாகவே இருந்திருக்கக் கூடும். ஏனென்றால் மூவேந்தர்கள் முட்டி மோதிக்கொண்டது இந்த உலகத்தில்தான்.

வரலாறு திரிக்கப்படுவதும் உண்டு. உதாரணம் மகாவம்சம். கி.பி. 6ம் நூற்றாண்டில் புத்தபிக்கு ஒருவரால் எழுதப்பட்ட இந் நூலில் பல விடயங்கள் நம்ப முடியாதவை என்பர் இன்றைய ஆய்வாளர்.இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நம்ப முடியாத இந்த ஐதீகங்களே காரணம் என்பது தெளிவு. இதிலிருந்து வரலாற்றை நாம் பேண வேண்டியதன் அவசியம் தெரிகின்றதல்லவா?

அன்புடன்

வாகரைவாணன்.



# அமைதி தேடி......

சிநேகமுடன் விமல்

‘எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி’என்று அலைகின்ற மனித உள்ளங்களைச் சந்திக்கின்றோம். வாழ்க்கையில் பணமிருந்தும், திறமைகள் இருந்தும், நல்ல வேலைகள், மனைவி, பிள்ளைகள் வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் இருந்தும் உள்ளுக்குள் ஏதோ ஓர் வெறுமை உணர்வோடு வாழ்க்கையை ஓட்டுகின்ற மனிதர்களைப் பார்க்கின்றோம். வீட்டிலே அன்பான மனைவி, பிள்ளைகள் பாடசாலை நண்பர்கள் என அதிகமானோர் சூழ்ந்திருந்தாலும் தனிமையுணர்வோடு தவிக்கின்ற மனிதர்களைப் பார்க்கின்றோம். ஒட்டு மொத்தமாக மனிதன் தனக்குள்ளே ஓர் வெறுமையுணர்வோடும், தனிமையுணர்வோடும், சஞ்சலத்தோடும், பதற்றத்தோடும் வாழ்க்கைக் காலத்தை போக்கிக் கொண்டிருக்கின்றான்.

பணமிருந்தும்
திறமைகளிருந்தும்
வேலைவாய்ப்புக்களிருந்தும்
நண்பர்களிருந்தும்
வசதி வாய்ப்புக்களிருந்தும்
அமைதியில்லாமல் தவிப்பது ஏன்?

## எண்ணங்கள்

உன் சந்தோஷமற்ற வாழ்விற்கு உன் எண்ணங்களே காரணம். நீ உன்னைப் பற்றி எப்போதும் தவறாக எடைபோட்டால், அல்லது உன்னை இகழ்ந்து கொண்டே அல்லது உனது சந்தோஷமின்மைக்கு மற்றவரே காரணம் என்று எப்போதும் குறை கூறிக் கொண்டேயிருந்தால் உனது வாழ்வு நரகத்திலே சிக்கித் தவிக்கும். நீ வரட்சியான எண்ணங்களோடும் தனிமையுணர்வோடும், அலைபாயும் மனதோடும் உன் காலத்தைகழிப்பாய்.ஆகவே நல்ல எண்ணங்களை வளர்க்க நீ முயலவேண்டும்.

உன்னை மூன்று வகையான எண்ணங்கள் ஆட்கொள்கின்றன.

1) ஆக்கபூர்வமான எண்ணங்கள்
(Positive Thoughts)
2) நேர்மறையான எண்ணங்கள்
(Negative Thoughts)

3) அநாவசிய எண்ணங்கள்.
(பகற்கனவு)

ஆக்கபூர்வமான எண்ணங்கள் என்கின்ற போது நீ எப்போதும்மற்றவர்களைப் பற்றியும் உன்னைப் பற்றியும் நல்லதாக எண்ணுதல். நீ உன்னைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் நல்லதாக எண்ணுகினற போது உனக்குள் நீ அமைதியை உணர்வாய். உன் முகம் எப்போதும் பிரகாசிக்கும். மரியாதையான வார்த்தைகள் உன் வாயிலிருந்து புறப்படும். உன்னை நண்பராக்க பலரும் முயல்வர். உன்னை மக்கள் மதிப்பர்.நீ மற்றவர்களுக்கு தீங்கு நினைக்காதவர் என்றபடியால் நீயும் அமைதியடைவாய், மற்றவரும் உன்னில் அமைதியடைவர். அன்பு,கருணை,அமைதி,பொறுமைஎன்பன உன்னில் உதயமாகும்.

நேர்மறையான எண்ணங்கள் என்கிற போது நீ உன்னைப் பற்றியும் மற்றவரைப் பற்றியும் தவறாக எண்ணுதலேயாகும். இவ்வெண்ணங்கள் உன்னை அமைதியாக இருக்கவிடாது. எரிச்சல்,பொறாமை,மிதமிஞ்சிய காம உணர்வுகள் போன்றன உன்னுள் உருவெடுத்து உன்னை சந்தோஷமற்ற மனிதராக மாற்றும். தீய சிந்தனைகள் எப்போதும் தீயஎண்ணங் களையே உருவாக்கும்.

அனாவசிய எண்ணங்கள் என்கின்ற போது நீ எப்போதும் உன் வாழ்வில் அடையமுடியாத சிந்தனைகளை உருவாக்கி அதன் நிமித்தம் வாழ்வதேயாகும். அல்லது தேவை யற்ற பய உணர்வுகளை உருவாக்கி அதற்கு அடிப்படையாக சந்தோஷமின்றி வாழ்வதேயாகும்.

ஆகவே ஆக்கபூர்வானமான நல்ல சிந்தனை களை உருவாக்கி அதன்படி வாழ்கின்றபோது உன்வாழ்வு அமை தியில் திளைக்கும்.உன் முகத்திலே புன்னகைப்பூ பூக்கும். நல்ல எண்ணங்கள் உருவாக தியானம், செய்தல் நல்ல புத்தகங்கள் வாசித்தல், நல்லவற்றைப் பேசுதல் அவசியமாகும். ஆகவே நல்லவற்றைப் பேசி நல்லவற்றை சிந்தித்து நலமே சூழ மகிழ் விலும் அமைதியிலும் சங்கமித்து வாழ்வோமாக.



## நிலைமைகள்

இப்பொழுது
எங்கள் தேசத்தில்
கொலைகளும் ....
கொள்ளைகளும் ....
குடியேற்றம் நடத்துகின்றன ....
அதனால்தான்
அல்லல்கள்
அடுக்கப்படுகின்றன ....!

இங்கே
அகிம்சைவழிகள்
அனாதையாகிவிட்டன ....
பலாத்காரங்களின்
பரவலாக்கல்கள்
ரத்தத்துடன்
ரஹஸ்யம் பேசுகின்றன ....!

கண்ணீரோடு
கைகுலுக்கிக் கொண்டு ....
சொந்தங்கள்
பந்தங்களெல்லாம் ....
சமாதானத்திற்கு
சவுகைகோருகின்றன ....!

ஆனாலும்
திணிப்புக்கள் இன்னும்
தீண்டிக் கொண்டே
இருக்கின்றன ....!

உறவுகளுக்கு
ஆறுதல் வார்த்தைகளை
அன்பளிப்புச்
செய்துவிட்டு வரும் ....
எங்களின்
உரிமைகளும்
உயிரற்று விடுகின்றன ....!

இருந்தும்
அமைதிகளுக்கு
அடைக்கலம் கொடுத்து
ஆறுதலடையும் போது ....
தேறுதல்கள் எங்கோ
தொலைந்து விடுகின்றன ....!

கலவரங்கள்
கண்ணீரோடு
கலந்து விடுகின்றன ....
இன்னும்
வேதனைகளுக்கு
வெள்ளி விழாக்களும் ....



வெஞ்சங்களுக்கு
வைரவிழாக்களும் ....
எடுத்துக் கொண்டிருக்கின்றோம் ....!

மீண்டும் வேண்டாம்
அந்த அராஜகமான ....
யுத்த ஜுவாலையின்
நிலைமைகள் ....!

எம்.ரீ.எம்.யூனுஸ்
காத்தான்குடி

'அரிசி' யிலிருந்து கிரேக்க 'ஒரிசி' எனவும் 'கறுவாயி' லிருந்து 'கற்பியனும்' 'இஞ்சிவேரி'லிருந்து 'சிக்கி பெரோசும்' 'பிப்பிலியி' லிருந்து 'பெப்பரியும்' தமிழிலிருந்து பெயர்ந்து சென்ற சொற்களாகும்.

இது போல் 'சந்தனம்' ஆங்கிலத்தில் SANDAL ஆனது. தோகை (மயில்) கீப்புரு மொழியில் துக்கி (TUKKI) ஆனது.

பேராசிரியர் . சி. பாலசுப்பிரமணியன்.

# மனிதாபிமானத்தை வாழ வைப்போம்

“குறுகிய சுவர்களாய் - குட்டிச் சுவர்களாய் எங்கே உலகம் பேதப்படாமல் இருக்கிறதோ - அங்கே என் தேசம் விழித்தெழட்டும்” என்றார் சாந்தக் கவிஞர் தாகூர்!

ஆனால் இன்று - சமுதாயம், அரசியல், பொருளாதாரம், மதங்கள் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் - அங்கிங்கெனாதபடி எங்கும் குறுகிய எண்ணங்கள் - பேதங்கள் - பிரிவினைகள்!

வல்லரசுகளால் தொடுக்கப்படும் மரபுச் சண்டைகள் ஒரு புறம்! கொரில்லாப் போர்களும், மனித வெடி குண்டுகளும் தொடுக்கும் கொடூரச் சண்டைகள் மறுபுறம்!

அரசியல் அதிகார மையங்கள் எடுக்கும் தவறான முடிவுகளால் -செயற்பட்டால், உலகில் அப்பாவி மக்கள் உயிரிழக்கும் அவலம் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதுவும் கடந்த இருபது ஆண்டுகளில் தீவிரவாதமும், மனிதவெடி குண்டுகளால் பழிதீர்க்கும் பயங்கரவாதமும் உலகமெங்கும் பல்கிப் பெருகிவிட்டருக்கின்றன.

கடந்த 1989 முதல் இன்று வரை இந்தியா சந்தித்து வரும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் கோரமுகத்தை - உலக நாடுகள் குறிப்பாக வல்லரசு நாடான அமெரிக்கா கண்டு கொள்ளாததன் விளைவு - இன்று பல நாடுகள் பயங்கரவாதிகளின் வன்முறையால் கலங்கிப் போயிருக்கின்றன!

2001 செப்டெம்பர் 11 இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகர இரட்டைப் பலமாடி கட்டடங்கள் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட போது, உலகமே அதிர்ந்து போனது!

2004 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் செசன்யத் தீவிரவாதிகளால் 150 பள்ளிக் குழந்தைகள் உட்பட சுமார் 360 பேர் உயிரிழந்த போது - ஒட்டு மொத்த உலகமே கண்ணீர் சிந்தியது.



அதே ஆண்டில் ஸ்பெயின் நாட்டு மாட்ரிட் நகரில் - ஓடும் ரயில் வண்டிகளில் வெடித்த குண்டுகளால் 191 உயிர்கள் பலி வாங்கப்பட்ட போது - கலங்காதோர் யாருமில்லை!

அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, டென்மார்க் போன்ற நாடுகள் ஈராக்கின் மீது தொடுத்த போரின் விளைவு - சதாம் ஹுசைனைப் பிடிக்கின்ற முயற்சி முடிவுக்கு வந்தது! ஆனால் ஈராக்கின் அமைதி சீர்குலைந்து போனது - மயான பூமியாக அது மாறிப் போனது!

ஆப்கானின் தலிபான்களும், ஒசாமா பின்லேடனின் “அல்ஹைடா பயங்கரவாதிகளும் நடத்தும் வன்முறை வெறியாட்டம், உலகையே குலை நடுங்க வைத்திருக்கின்றன.

கடந்த ஜூலை 7ஆம் திகதி லண்டன் நகரத்து பாதாள ரயில்களிலும், பேருந்துகளிலும் வெடித்த குண்டுகளால், 50 க்கும் மேற்பட்டோர் உடல் சிதைந்து உயிர் விட்ட பயங்கரம் நடந்திருக்கிறது! அடுத்து எகிப்து நாட்டின் சுற்றுலாத் தலத்தில் பயங்கரவாத ரத்தக் களரி அரங்கேறியுள்ளது.

## பாண்டியன் நெடுஞ்செழியன்

மனிதர்கள் செந்நீர்சிந்த - மனிதாபிமானம் கண்ணீர் சிந்தத் தொடரும் இத்தகைய தீவிரவாத, பயங்கரவாத வன்முறை வெறியாட்டத்துக்கு முடிவுதான் என்ன?

புத்தன், இயேசு, நபிகள், காந்தி போன்ற சமாதானத் தூதுவர்கள் பண்படுத்திப் போன இந்த உலகத்தின் மனிதாபிமானம் இன்று புண்பட்டுப் போயிருக்கிறதே. அதை மருந்திட்டு குணமாக்கப் போகிறோமா? அல்லது புரையோடி விட்டிருக்கிறது எனச் சொல்லி அறுவை செய்யப் போகிறோமா?

சுமார் 750 கோடி ஒளி ஆண்டுகள் தூரம் பரந்து விரிந்திருக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் சூரியக் குடும்பத்தின் வயதும் நாம் வாழும் இந்தப் பூமியின் வயதும் 460 கோடி ஆண்டுகள்! உயிரினத்தின் வயது 360 கோடி ஆண்டுகள். “ஹோமோ சேபியன்ஸ்” எனப்படும் மனிதனின் வயது 5 இலட்சம் ஆண்டுகள் தான்.

**"டைனோசர்கள்" எனப்படும் ஊர்வன உயிரிகள் 26 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் ஒட்டு மொத்தமாக அழிந்து போயின. அந்த டைனோசர்கள் இந்தப் பூமியில் வாழ்ந்த காலம் சுமார் 20 கோடி ஆண்டுகள் - ஆனால் மனிதன் தோன்றி 5 லட்சம் ஆண்டுகள் தான் நிறைவுப்பெற்றிருக்கின்றன. அந்த டைனோசர்கள் வாழ்ந்த காலமாவது மனிதர்களாகிய நாம் இந்த பூமியில் வாழப் போகிறோமா? அல்லது அழிவைத்தரும் ஆயுதமேந்தி ஒட்டுமொத்த மனித குலமும் அழியப் போகிறோமா? இது தான் நம் முன் உள்ள கேள்வி.**

**"பாரடா உனது மானுடப் பரப்பை!**
**பாரடா உன்னுடைய பிறந்த பட்டாளம்"**

**என்று முழக்கமிட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் அழைப்பை ஏற்று "ஹோமோசேப்பியன்ஸ் நாம் ஒருவரே!"** (Homo Sapiens - We are one) **என்று ஒன்றுபட்டு, பேதம் களைந்து வாழப் போகிறோமா? அல்லது வதைப்பட்டு அழியப்போகிறோமா? இந்தக் கேள்விகளுக்கு ஒட்டு மொத்த உலகமும் பதில் சொல்ல வேண்டிய தருணம் இதோ நம் முன்னால்! " பிரபஞ்சத்தின் ஏதேதோ ஒரு பகுதியில், பற்றி எரியும் சூரியன் என்ற நெருப்புக் கோளத்தைச் சுற்றி சுழலும் சின்னஞ்சிறு பூமியில் நம் வாழ்க்கை புதிரானது!" என்றுரைத்த கருத்துப்படி 'நாட்லாண்ட்' என்ற விண்ணியலாளரின் கருத்துப்படி புதிரானது இந்த உலக வாழ்வு! புரிந்து கொள்வோம்.**

**வன்முறையை விலக்கி வாழ்வோம்!**
**மனிதாபிமானத்தை வாழ்விப்போம்!**

**- தினமணி -**



# புத்தர் காவியம்



## பாயிரம்

ஞாதியெலாம் துறந்து
ஞானமதைத் தேடி
போதி மரத்தடியில்
போயமர்ந்து கொண்டாய்!
மேதினியில் நீ ஓர்
மேன்மை மிகு பிறப்பு
சோதி நீ! வாழ்வில் !
சொன்னதெலாம் வேதம்!

கருணையின் வடிவமாவாய்
காலது ஒடிந்த ஆட்டை
உருகியே தழுவலானாய்
உலகமே அறியாதொன்று!
பெருகிடும் ஆசை என்னும்
பெருங்கடல் தன்னைத் தாண்டி
தெருவினில் திரியலானாய்
திகம்பர முனிவர் போல!

நான் உன்னைப் பாடிட
நனி ஆசை கொண்டேன்
தேன் அன்ன கவிதை
தேரில் உனை ஏற்றி
வான் நிலாப் போல
வலம் வர விழைந்தேன்
கோன் நீ உள்ளத்தில்
கோலோச்சுவாயே!

## கபிலவஸ்து

மலையதன் பக்கமாக
மண்ணது கபிலவஸ்து
தலைதனில் மகுடம் போல
தண்பனி சூடும் தேசம்
மலரது தூவும் காலை
மரம் செடி கொடிகள் யாவும்
அலையெனக் காற்று வந்து
ஆசையால் வருடிச் செல்லும்

காலையில் புட்கள் எல்லாம்
கண்ணது விழித்துக் கொண்டு
மாலை போல் ஒன்று ஆகி
மங்களக் கானம் பாடும்
சோலையும் அதனைக் கேட்டு
சொக்கிடும்! சுகந்தமங்கு
சாலவும் வீசும் எங்கும்;
சரமென துளைத்துச் செல்லும்!

மந்திர முழக்கம் கேட்கும்
மறையவர் கோயில் தோறும்
அந்தமில் இறைவன் தம்மை
ஆயிரம் விதமாய்ப் போற்றி
சிந்தையில் குளிரலானார்
செய் பூசை, கிரியை எல்லாம்
சந்தியின் அருமை தன்னைச்
சகமது அறியச் செய்யும்



நாடதன் அரணேயாக
நாற்புறம் மலையின் கூட்டம்
காடதில் முயல்கள் தாமும்
கவலின்றி மேயச் செல்லும்
வீடது போலவாகும்
விலங்குகள் பறவைக்கெல்லாம்
ஈடில்லா மகிழ்ச்சி வெள்ளம்
எழும் ஒரு நதியைப் போல

வானத்தைப் பார்த்து நிற்கும்
வனப்புறு மலைகள் எல்லாம்
மோனத்தில் நிலைக்கும் முந்தை
முனிவனின் மனத்தைப் போல
ஞானத்தை உணரச் செய்யும்
நல்லதோர் பாடமாகும்
ஊனத்தில் புரளும் சின்ன
உள்ளமும் அறியுமாமோ?

மலையதன் உறுதி போல
மனமுடன் உடலும் கொண்டு
தலமதில் வாழும் மக்கள்
தம் தொழில் திறமையாலே
நலமுடன் வாழலானார்
நானிலம் புகழும் பண்டைக்
குலமதன் சரிதம் தன்னைக்
குவலயம் அறியுமாமே!

சாக்கியர் என்னும் அந்தச்
சத்திரிய வம்சம் அன்று
ஆக்கிய தேசமாகும்
அழகிய கபிலவஸ்து
நாக்கது ஊறச் செய்யும்
நறுமலர்த் தோட்டம் போல
பாக்கியம் செய்த பூமி
பசுமையின் சுரங்கமாகும்.

## மன்னன் சுத்தோதனன்

சுத்தோதனன் என்னும் பேரான்
சுதந்திர மன்னனாக
அத்தலம் ஆளலானான்
அவனது கொற்றம் கண்டு
எத்திசை வாழும் மக்கள்
ஏத்தியே போற்றுவார்கள்
நித்தமும் அவனின் நாமம்
நெஞ்சினில் வாழுமாமே!

தேவதா என்னும் ஊரின்
தேவதை மாயா என்பாள்
காவலன் அரசியாவாள்
காதலில் இணைந்ததாலே
பூவையும் கொழுநன் பாதம்
போற்றியே வாழலானாள்
ஓவியம் போலும் பெண்ணை



நால்வகைப் படைகளோடு
நல்லரசு தனைச் சொல்லும்
நூல் வகைப் பயிற்சியோடு
நுண்ணிய அறிவினோடு
கோலது அவனும் தாங்கி
குடிமக்கள் தம்மைக் காப்பான்
மால் என மன்னன் தன்னை
மக்களும் பணிகுவாரே!

## கௌதமன்

தர்மத்தின் வழியில் நின்று
தானவன் ஆட்சி செய்வான்
வர்மத்தை, சினத்தை, தீய
வன்பகை முழுதும் விட்டு
கர்மமே கண்ணாய்க் கொண்டு
கடனது புரியலானான்
சர்வமும் மக்கட்கென்று
சட்டமும் செய்யலானான்

(இன்னும் வரும்)

# மனதிற்குள் ஒரு சந்தோஷக் கடை திறப்போம்

வருத்தம், வேதனை, கண்ணீர், கவலை, வெறுப்பு, விரோதம், குரோதம் எல்லாம் மனம் முழுக்க நிறைந்திருக்கின்றன. சந்தோஷம் மட்டுமே ஏழு உலகில் தேடியும் கிட்டாத அபூர்வப் பொருளாக இருக்கிறது. நழுவும் கானல் நீராக, கைக்குச் சிக்காத காற்றாக - இங்கே அங்கே, இதோ அதோ என எல்லோருக்கும் போக்குக் காட்டுவது சந்தோஷம்.

குறிப்பிட்ட அடையாளமோ ஒரே மாதியான உருவத் தகுதியோ இல்லாதிருப்பதால்- சந்தோஷத்தை உடனடியாக நாம் இனம் காண்பதில்லை. 'இது தான் சந்தோஷம். இதன் நீள, அகலம் இது. இதன் உயரம், வடிவம், பருமன் இது' என்பதான குறிப்புச் சட்டத்துக்குள் குறுக்க முடியாத அரூபம் இது. அவரவர் வசதிக்கும், தகுதிக்கும், தேவைக்கும், உணர்தலுக்கும், கற்பனைத் திறனுக்கும் ஏற்ற மாதிரி சந்தோஷமும் - அடையாளமும் மாறும். உருவமற்ற மனதில் குடியிருக்கும் உருவமற்ற உணர்வு சந்தோஷம். உணர்ந்தோருக்கு தரிசனம் தரும். ஆயின் நம் கண்முன்னே நடமாடினாலும் கூட - அதை யாருமே புரிந்து உணர்வ தில்லை.

பத்து ரூபாய், கோடி ரூபாய், பட்டுப்புடைவை, நூல் புடைவை, அரண்மனை, அடுக்குமாடி, நூறுகிலோ பவுன், குந்துமணித் தங்கம், - இவற்றில் இல்லை சந்தோஷம். மனசில் மட்டுமே இருக்கிறது. பாலும், பழமும், விருந்தும், புளிஏப்பமும் நிறைந்திருக்கும் வீட்டில் சந்தோ ஷம் பொங்கி வழிகிறது என்பது சரியில்லை. கிடைக்கும் ஒரு ரொட்டியை பாதியாக பகிர்ந்து தின்று, ஒரு கோப்பைத் தேநீரை ஒரு வாய் குடித்துக் கொள்ளும் தொழுநோய்த் தம்பதிகளிடம் சந்தோஷம் இல்லை என்பது சரியில்லை. கிடைப்பதில் சந்தோஷப்பட மனசைப் பழக்குவோம்.

குழந்தைகளுக்கு சொக்லேட், பள்ளிக் குழந்தைக ளுக்கு ஒரு பென்சில், பதின் பருவத்தில் விளையாட்டுச் சமான், மிதி வண்டி, கல்லூரி வயதில் ஊர் சுற்றல், திரைப்படம், நண்பர்கள் கூட்டம், காதல் திருமணம்; நடுத்தர வயதில் வீடு, வாகனம், பணி உயர்வு ;முதிய வயதில் நிம்மதியான ஓய்வு - இப்படியாக பருவம் தோறும் உருவம் மாறுவது சந்தோஷத்தின் இயல்பு.



வாழக் கிடைத்திருக்கும் ஒவ்வொரு வினாடியிலும் சந்தோஷத்தை அடையாளம் கண்டு, நழுவ விடாமல், சிக்கெனப் பிடிக்கும் இயல்பு அவசியம். ஒவ்வொரு விடியலையும் பெரும் புதையலைப் போல் சொர்க்க மகிழ்வோடு அனுபவித்து வாழவேண்டும். வாழ்ந்து அனு பவிக்க வேண்டும். கண்ணீரும், கம்பலையும், அழுகையும், ஆற்றா மையுமே நிழலாய் நம்மைத் தொடர்ந்தால் தான் என்ன? நாம் அவற்றுக்கு அடிமையாகிச் சேவகம் செய்து அதன் கட்டுப்பாட்டில் மன நிம்மதி தொலைத்தால் அவை நம்மை வெற்றி கொண்டதாகி விடும்.

'சோகம் எனைத் தின்று விட அனுமதிக்கமாட்டேன்; கண்ணீர் என்னைக் கொன்றுவிட அனுமதிக்கமாட்டேன்; வருத் தமும் வேதனையும் என்னை வென்றுவிட அனுமதிக்கமாட்டேன்' என்கின்ற மன உறுதியை இயல்பானதாக்கிக் கொண்டால், கண்ணீர் கானல் நீராகலாம். சறுக்கி விழாமல் சாதனைப்படி ஏறலாம்.

தீராத பிரச்சினை என எதுவுமே கிடையாது. தீர்வு இல்லாத துன்பம் என எதுவுமே கிடையாது. பிரளயம் வந்தாலும் 'கலங்காதிரு மனமே' என மனசுக்குள் சொல்லித்தர வேண்டும். துன்பச் சூழலில் சிக்கினாலும், வருத்தச் சூழலில் வாழ்ந்தாலும் என்ன? முகத்திலும், கண்ணிலும் , சிரிப்பிலும், மனசிலும் துயரச் சாயமில்லாமல் வாழப் பழக வேண்டும். 'நாளையும் விடியும்' என்கிற நிர்ச்சலன மனோநிலையைக் கையகப்படுத்த வேண்டும்.

நெருப்புப் புயல் வீசும்போதும், கண்ணீர் கரை உடை க்கும் போதும் - மனசைக் கழற்றி தனியாக வைத்துவிட்டால் போதும் . நம் சறுக்கலையே, நம் தோல்வியையே, நம் வாழ்வையே -தாமரை இலைத் தண்ணீர் மனோபாவத்தோடு அனுகப்பழகுதல் அவசியம், அதிலேயே புதை மணலாய் மூழ்கிப் போவது சாதாரண ர்களின் வாழ்வியல் முறை. அதிலிருந்து மீண்டு வந்து வாழ்க்கை ஓடத்திற்கு மீண்டு வருவது தான் அசாதாரணர்களின் அனுகு முறை. அப்போது தான் இறுக்கம் குறையும் சறுக்கல் குறையும்.

கடைசி சுவாசம் வரைக்கும் வாழ்ந்து தீர்க்க வேண்டிய வாழ்க்கை இது. ஒரு நிலையில் நில்லாமல் தத்தித் தாவும் மனசுக்கு நங்கூரமிட்டு, வாழ்நாளைக் கடத்துவது பிரம்மப் பிரயத்தனம் தான். ஆயின் அதையே சவாலாக ஏற்று செய்து பார்ப்பதும், செயலில் காட்டுவதும் தான் நமக்கும் பிறவிலங்குகளுக்குமான வித்தியாசம்.

பிரச்சினை தான் நம் ஆசிரியர்கள். அவைதான் அனுபவம் எனும் பொக்கிஷம் தரும் - இலவச போதி மரம். அவைதான் பட்டறிவு விதைகளை நம்முள் ஊன்றும்.

துன்பத்திலும் இன்பத்திலும் காணுதல், சறுக்கலிலும் சந்தோஷம் பேணுதல், இருட்டிலும் வெளிச்சவேர் தேடுதல் என மனசை பக்குவப்படுத்துதலே தவம். காடு மலை ஏகாமல், கசாயம் கட்டி போகாமல், மக்களோடு மக்களாயிருந்து புரிகின்ற தவம் இது. பிரச்சினையை தீர்க்க முடியாமல் தப்பித்துத் தனிமையில் கூடு கட்டாமல், ஜனரஞ்சக வாழ்விலிருந்து புரிகின்ற தவம் இது.

**ஆண்டாள் பிரியதர்சினி**

சந்தோஷம் என்பது நமக்குள்ளிருப்பது. சுவாசம் போல் நமக்குள் கூடு கட்டுவது. இழை பின்னுவது. இப்போது இந்த வினாடியில், இப்போதிருக்கும் வாழ்க்கையில் எத்தனை பேர் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று கேட்டால் 'இல்லை' என்பவர்கள் தான் ஏராளம்.

இன்னமும் சிறப்பாக முன்னேற்றம் வேண்டும் என்பதான கனவு வேறு. இலட்சியம் வேறு. உயர்வு வேறு. வாழும் வாழ்வில், சந்தோஷமின்றி, திருப்தியின்றி இருத்தல் என்பது வேறு.

“ நாளை - இது கிடைத்தால் - சந்தோஷமாயிருப்பேன். இந்த நகை கிடைத்தால் சந்தோஷமாயிருப்பேன். இந்தக் கனவு நிறைவேறினால் சந்தோஷமாயிருப்பேன்...” என ஒப்புதல் வாக்கு மூலம் தருவார்கள் பலர். அதற்கும் என்ன உத்தரவாதம்.? அப்புறமும் மனசில் திருப்தியின்மை - சந்தோஷமின்மை நிச்சயம். சந்தோஷத்தை தள்ளிப் போடப்போட அதுவும் நம்மை விட்டு தள்ளிப் போகும்.



இப்போது, இந்த நொடியில் வாழ மனசைப் பழக்குவோம். நிகழ்காலம் மட்டுமே நிச்சயம். உள்ளங்கையிலே உட்கார்ந்திருக்கும் இந்த நொடித்துளியே நிஜம். ஒவ்வொரு துளியாய் நழுவி நழுவி - நிகழ்காலம் இறந்த காலம் ஆகின்றது. வருங்காலம் நிகழ்காலம் ஆகின்றது. நிகழ்காலம் மட்டுமே நிகழ்ந்த வண்ணமாகவே இருக்கின்றத.

எனவே, இப்போது மலரும் பூ, இப்போது தளரும் சருகு, இப்போது உதிக்கும் சூரியன், இப்போது மறையும் சூரியன், இப்போது சிரிக்கும் நிலவு, இப்போது வீசும் காற்று, இப்போது சுழலும் சூறாவளி, இப்போது நிறைக்கும் மழை, இப்போது தெறிக்கும் சாரல், இப்போது இருக்கும் பணப் பிரச்சினை, இப்போது இருக்கும் மனப் பிரச்சினை, இப்போது, இருக்கும் உறக்கம், இப்போது இருக்கும் பசி, இப்போது இருக்கும் விருந்து என நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களே சந்தோஷ விதைகள். அதுவே முக்தி. அதுவே மனநிம்மதி யுக்தி. நிகழ்காலம் தான் - நமக்குக் கிடைக்கும் பெரும் பேறு.

“ இதுவல்ல என் சந்தோஷம்” என ஒவ்வொன்றாக மறுதலிக்க வாழ்க்கை முழுவதும் கானல் நீர்த்தேடலாகிவிடும். காற்றைப் பிடிக்க கையில் வலையோடு அலைந்து திரிவதாகிவிடும்.

வாழ்க்கை - கானல் நீர் இல்லை. கையில் கிடைத்திருக்கும் குபேரச் சொத்து. வாழ்க்கை - விஷக் கோப்பை இல்லை. சுவையான தேநீர் கோப்பை. சாதனையோ, வேதனையோ, போராட்டமோ, போர்க்களமோ, சறுக்கலோ, உயர்த்தலோ, வறுமையோ, வளமையோ, வெறுமையோ, பெருமையோ - நிகழ்காலத்தின் வாரிசு தான். எனவே - நிகழ்காலத்தை சந்தோஷமாகக் கொண்டாடுவோம். சந்தோஷ பிராண வாயு செலுத்தி உற்சாகமாக சிலிர்ப்போம். ஒவ்வொரு வரும் திறப்போம் - மனசுக்குள் ஒரு சந்தோஷக் கடை.

- தினமணி-

# இருளில் ஒரு தேசம்

## நம்பிக்கை ஒளி

இந்தோனேஷியாவின் சுமத்திராத் தீவுக் கடலில் உண்டான பூகம்பம் இலங்கையின் கரையோரப் பகுதிகள் சிலவற்றை நிர்மூலமாக்கி விடுமென்று யாருமே நினைத்திருக்கமாட்டார்கள். திடீரெனத் தோன்றிய திரைகடல் பூகம்பம் ஆயிரக் கணக்கில் மனித உயிர்களை அள்ளிச் சென்றமையை வானொலி தொலைக்காட்சி ஊடாக அறிந்த செல்வநாயகம் அந்த இடத்திலேயே மயக்கம் போட்டு விழாத குறைதான்.

'கடல் வருது' என்று சொன்னபோது உண்மை அறியாது அதனை பரிகசித்ததிற்காக வெட்கப்பட்ட அவர், 'எங்கட காலத்தில நாங்க காணாத புதினம் இது' என்று தனதுமனைவி கமலத்திடம் திரும்பத் திரும்பக் கூறி தன்னைத் தானே தேற்ற முயன்றார்.

பொதுவாகத் தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக நாட்டம் இல்லாத கமலம் அன்று தனது கணவனோடு அமர்ந்து தொலைக்காட்சிப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவளும் அவரது மனநிலையிலேயே இருந்தாள். ஆனாலும் காலையில் மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக் கல்லூரியில் இடம் பெற்ற அநாகரிகமான சம்பவம் ஒன்று அவள் கண் முன் தலை காட்டவே செய்தது.

கடலுக்குப் பயந்து உயிரைப் பாதுகாப்பதற்காக உடுத்த உடையோடு தொழில் நுட்பக்கல்லூரிக்குள் ஓடி வந்த சனங்கள் அங்கு இடம் பிடிப்பதற்காக அதனை ஒரு குருஷேத்திரமாக்கி விட்டார்கள். இந்த யுத்த களத்தில் அவர்கள் அருவருப்பான வார்த்தைகளை அள்ளி இறைத்தபோது கல்லூரி மண்டபமே அதிர்ந்து போனது.

இந்த அதிர்ச்சியில் நிலை குலைந்து போன சந்தியா, 'அம்மா நாம வெளியில போய் நிற்பம் ...வெயில் எண்டாலும் பரவாயில்லை ....இங்க இருக்க ஏலா ... இந்தச் சனங்களுக்கு எங்க போனாலும் சண்டைதான் ...' என்று கூறி அவசர அவசரமாகத் தங்கள் இருவரையும் வெளியே அழைத்துக் கொண்டு வந்ததை நினைத்துப் பார்த்த கமலம் கடல் வந்ததிற்கு சனங்களின் இந்தக் குணமும் ஒரு காரணந் தான் என்று எண்ணி வருந்தினாள்.



கடல்கோள் பற்றியும் அது சுனாமி என்று யப்பான் மொழியில் குறிக்கப்படுவது பற்றியும் தொலைக்காட்சி மூலம் அறிந்து கொண்ட செல்வநாயகம் இன்னும் அது பற்றி அறிய வேண்டுமென்ற ஆசையில் இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை.

இந்தச் சமயத்தில் அங்கு வந்த பக்கத்து வீட்டுக்காரர் தர்மலிங்கம் மாஸ்ரர் சுனாமிச் செய்திகளைச் சுடச்சுட ஒரு பத்திரிகை நிருபர் போல செல்வநாயகத்திடம் கொட்டி விடுகின்றார்.

நாவலடி , டச்பார் ,புதுமுகத்துவாரம் ,திருச்செந்தூர் இந்த ஊரெல்லாம் இருந்த இடமே தெரியல்ல .... ஆயிரக் கணக்கில் சனங்கள் செத்துப் போயித்துதுகள் .... தூர இடங்களில் இருந்து நாவலடி காயத்திரி கோயிலுக்கு போனவர்களையும் கடல் விட்டு வைக்கல்ல .... அதிலும் கொடுமை என்னவெண்டால் கடலின் பிடியில் இருந்து ஒரு மாதிரி தப்பிப் பிழைத்த சில பொம்புளைகளின் நகை நட்டுக்களை இந்த நாசமாய் போனதுகள் அறுத்தெடுத்து அதுகளை கெடுத்துப் போட்டானுகள் .... சிலரின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் கேள்வி .... சொல்லவே நாக் கூசுது .... நடக்கிறதைப் பார்த்தா இப்பதான் கலிகாலம் ஆரம்பிச்சிருக்குப் போல தெரியுது.

மாஸ்ரரின் வாயில் இருந்து வந்த ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கக் கேட்க செல்வநாயகத்திற்குத் தலை சுற்றத் தொடங்கியது. கமலத்தின் கை கால்கள் உதற ஆரம்பித்தன.கதிரவனும் சந்தியாவும் கண்ணீர் விட்டனர். இதெல்லாம் பார்த்த மாஸ்ரரின் கண்களும் கலங்குகின்றன.அவர் தோளில் கிடந்த சால்வையால் கண்களைத் துடைத்துக் கொள்கின்றார்.

**வாகரைவாணன்**

தர்மலிங்கம் மாஸ்ரரின் நியூஸ் றிப்போட் செல்வநாயகத்தின் வீட்டை நீண்ட அமைதித் திரைக்குள் தள்ளி விடுகின்றது. வாய் இருந்தும் ஊமைகளாய் ஐந்து பேரும் அப்படியே அமர்ந்திருக்கின்றனர். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது ? இயற்கையின் ஊழித் தாண்டவம் இறைவனின் சங்காரம் அன்றி வேறு என்ன ? அதர்மத்தின் தலையில் விழ்ந்த பலமான அடி இது .... ஆனாலும் மனிதன் திருந்தவா போகின்றான்.?

அந்த வீட்டில் நீண்டநேரம் தோன்றிய அமைதித் திரையை செல்வநாயகத்தின் மென்மையான வார்த்தைகள் மெதுவாக திறந்து வைக்கின்றன.

மாஸ்ரர் .... உயிர் தப்பிய சனங்கள் இப்ப எங்க இருக்குதுகள்.?

அதுகள் எங்க போகுங்கள் ......? பள்ளிக்கூடங்களுக்குத் தான். சென்மைக்கல் கொலிஜ் , சென்றல் கொலிஜ் , சாள்ஸ் மண்டபம் , இதெல்லாம் நிறைஞ்சி வழியுதாம் ....

அப்படியானால் சாப்பாடு .....?

அரசாங்கம் ஒண்டும் கொடுக்கல்ல .... எகெட் தான் இப்ப கவனிக்கிது .... புண்ணியவான்கள் ...... தக்க நேரத்தில கை கொடுக்கிறாங்க..

இரவு ஒன்பது மணிக்கு மேலாகின்றது. தர்மலிங்கம் மாஸ்ரர் விடைபெற்றுக் கொள்கிறார். செல்வநாயகத்தின் வீட்டை மீண்டும் அதே அமைதித் திரை மூடிக் கொள்கிறது. இரவுச் சாப்பாட்டைப் பற்றி செல்வநாயகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சாப்பாடு வேண்டாமென்று கதிரவனும் சந்தியாவும் ஏற்கனவே தாய்க்கு அறிவித்தல் கொடுத்துவிட்டார்கள். அதனால் கமலம் மூன்று பேருக்கும் ரீ போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.

## அதிகாரம் - 02

அன்றிரவு ..... கதிரவன் கண்கள் மூடமறுக்கின்றன. அலையின் கோரப் பிடியில் சிக்குண்டு ஆரணி அபயக்குரல் எழுப்புவது போல ஓர் உணர்வு ..... கட்டிலில் இருந்து துள்ளி எழும்பிய கதிரவன் , வீட்டின் முன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகின்றான். பூரண நிலவு பொங்கி எழுகின்றது.

இயற்கையை எப்போது கண்டாலும் பரவசம் அடையும் கதிரவன் அன்று பூரண நிலவைக் கண்டு எரிச்சல் அடைகின்றான். எங்கள் தேசமே இருண்டு போயிற்று. இனி இந்த ஒளியால் என்ன பிரயோசனம் ? இயற்கையையே தெய்வமாக வணங்கிய எங்கள் மக்களுக்கு அதுவே எமனாகி விட்டதா ? ஆண்டாண்டு காலமாகத் தங்கள் பூமியைத் தழுவி மகிழ்ந்த கடல் இப்படித் திடீரென்று ஆர்ப்பரித்து எழும் என்று யார் நினைத்தார்கள்?

அடுக்கடுக்காய் எழுந்த இந்தக் கேள்விகள் கதிரவனின் நெஞ்சை அழுத்த அவன் முற்றத்தில் அமர்கின்றான். ஆரணி பற்றிய நினைவு அவன் மனதை அப்பிக் கொள்கின்றது.



ஆரணி ..... பெயருக்கேற்ப அழகுத் தெய்வம் ரதியின் கறுப்பு நிறம் அவளுக்கு கருமை என்றாலே பெருமை என்றுதான் பொருள். இந்த நிறமே அவளுக்கு ஒரு எடுப்புத் தான். இது மட்டும் தானா ? வண்ண நிலாப் போல வட்ட வடிவமான முகம். குறு குறு கண்கள்.....பாற்பல் வரிசை. கேலியும் கிண்டலும் நிறைந்த பேச்சு ....இது தான் ஆரணி....

ஆரணியின் இந்தப் புற அழகை விட அவளின் அக அழகு தான் கதிரவனை அதிகம் கவர்ந்தது.

எந்த ஒரு சூழ்நிலையிலும் தன்னை முன்னிறுத்திப் பார்க்காது தனது இனம், சமூகம் நாடு என்று சிந்தித்தல் , பேசுதல் .... எப்போதும் ஒரு நல்ல நூலை வாசித்தல். எழுதுதல் ... உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத உள்ளம்.... நாகரிகக் கடலில் மூழ்கிவிடாது பண்பாடு என்னும் புணையை பக்கத்தில் வைத்திருத்தல்... .இப்படித் தான் வாழ வேண்டும் என்னும் உயர்ந்த இலட்சிய வாழ்க்கை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் ஆரணியுடன் ஒன்றாகக் கற்கும் போதே அவளின் இந்த அக அழகை ஆலிங்கனம் செய்த கதிரவன் தன்னை விட அவள் வாழ்க்கையில் உயர உயரப் போக வேண்டும் என்று மனதார ஆசித்தான்.

பொங்கிப் பொழியும் பூரண நிலவு ....சீதளமான காற்று ..... மல்லிகைப் பூக்களின் மதுரவாசம்.ஆழ்ந்த அமைதி..... இவற்றையெல்லாம் மறந்து ஆரணியின் நினைவு மழையில் மூழ்கிக்கிடந்த கதிரவனை , அண்ணா நீங்க இண்டு இரவு முழுதும் நித்திரை கொள்ளல்லையா ? என்ற சந்தியாவின் கேள்வி நிஜ உலகிற்கு கொண்டு வருகிறது.

தங்கையின் இந்தக்கேள்விக்கு,இல்லை சந்தியா....எப்படி நித்திரைகொள்கிறது ...... இண்டைக்கு எப்படியாவது ஆரணியைத் தேடிக் கண்டு பிடித்தாகணும் ...... அவள் ஏதாவது ஒரு அகதி முகாமில் இருப்பாள் என்றே நம்புகிறன் என்று எங்கேயோ பாத்த வாறு பதில் சொல்கிறான்.

கதிரவனின் இந்த நம்பிக்கையை உறுதி செய்வது போல அதிகாலை ஐந்து மணிக்கு நாவற்குடா லூர்து மாதா கோயில் மணி ஒலிக்கின்றது.

(இன்னும் வரும்)

## உலக வரலாற்றிலே ..........

வடக்கு வியட்நாமிலிருந்து ஆதிக்க சக்தியான பிரான்ஸை ஹோசிமினின் கொரில்லாப் படைகள் விரட்டி அடித்து விட்டு வெற்றிக் களிப்பில் இருந்த சமயம் ...... தெற்கு வியட்நாமில் பதுங்கியிருந்த பிரான்ஸ் ஒரு திட்டம் தீட்டியது.

ஹோசிமின்ஒரு கம்பியூனிஸ்ட், சீனாவுக்கும் ரஷ்யாவிற்கும் நெருக்கமானவர். அவரை வளர விடுவது கை கட்டி வாய் மூடி கம்யூனிஸ்ட் ஆட்சி பரவுவதை ஏற்றுக் கொள்வதற்குச் சமன் என பிரசாரம் செய்தது.காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பதே அமெரிக்காவின் கொள்கை என்றாலும் கம்பியூனிஸ்ட்கள் வியட்நாமில் பரவுவதைத் தடுக்க, பிரான்ஸுக்கு ஆயுதங்களையும் உதவிகளையும் வழங்கியது.

இதையடுத்து, வியட்நாம் யுத்த பூமி ஆனது. அங்கே விண்ணிலிருந்து சதா குண்டு மழை பொழிய ஆரம்பித்தது. யார் நம் மீது குண்டு மழை பொழிகிறார்கள்?. ஏன் நம் நாட்டில் யுத்தம் நடக்கிறது என்று கூடத் தெரியாமல் அந்த ஜனங்கள் செத்து மடிந்தனர். இன்னொரு புறம் ஹோசிமினின் கொரில்லாப் படைகளோ எதிரிகளுக்கு மூச்சுத் திணறும் அளவுக்குத் தண்ணீர் காட்டியது. இந்தப் போர் பல ஆண்டுகள் நடந்தது. அமெரிக்காவின் ஜனாதிபதி நாற்காலிக்கு ஒருவர் மாற்றி ஒருவர் என மூன்று ஜனாதிபதிகள் மாறினர்.வடக்கு வியட்நாமில் ஹோசிமின் தலைமையில் வெற்றியே குறிக்கோள் என்று அவரது படை ஒருமுகமான சிந்தனையோடு பிரான்ஸின் படைகளை எதிர்த்து வெறியோடு போராடியது.

கடைசியில் 1965 ம் ஆண்டு வேறு வழியின்றி அமெரிக்கா, வியட்நாம் போரில் நேரடியாகக் குதித்தது. தாங்கள் போரிடுவது ஒரு ராணுவத்தை எதிர்த்து அல்ல. அதிரடிப் போரில் தீவிரப் பயிற்சி பெற்ற கொரில்லாப் படையினரை எதிர்த்து என்பதால் அமெரிக்கா இரக்கமே இன்றி வடக்கு வியட்நாமில் அமைதியாக இருந்த கிராமங்களின் மீது கூட விமானத்திலிருந்து குண்டுகளை வீசியது. அமெரிக்காவின் நவீன ஆயுதங்களையும் விமானங்களையும் பார்த்து மிரளாத ஹோசிமினின் கொரில்லாப் படை அமெரிக்காவின் ராணுவத் தளங்களுக்கே குண்டு வைத்தது. போரில் அமெரிக்கா நுழைந்த முதல் வருடம் ...... தாங்கள் குறைவான வீரர்களைப் பலி கொடுத்தது. அதிகமான கொரில்லாப் படையினரை கொன்றிருக்கின்றோம் என்பதை கிரிக்கட் ஸ்கோர் போல் பெருமையாக சொல்லிக் கொண்டது.



எண்ணிக்கையின் அடிப்படையில் வேண்டுமானால் அமெரிக்கா அப்போது ஹோசிமினின் கொரில்லாப் படைகளை விட போர் முன்னிலையில் இருந்தது என்று சொல்லலாம். ஆனால் அடுத்தடுத்து அது சந்தித்த சோதனைகள் அமெரிக்க வீரர்களின் மன உறுதியைக் குலைத்தது.

வியட்நாமின் அடர்ந்த காடுகளிலும் குளிரிலும் தாக்குப் பிடிக்க முடியாத பல அமெரிக்க வீரர்கள் போர்க்களத்தில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் தப்பி ஓடினர்.

அதனால் ஆனானப்பட்ட அமெரிக்காவே கடைசியில் ஹோசிமினைப் பார்த்து சமாதானமாகப் போய் விடலாமா என்று தூது விட்டது.

வடக்கு வியட்நாமையும் தெற்கு வியட்நாமையும் ஒன்று சேர்த்து தனி நாட்டை உருவாக்கும் வரை இந்தப் போர் ஓயாது என்று ஹோசிமின் சவால் விட ...... அமெரிக்கா அடிபட்ட புலி போல கர்ஜித்தது. அந்தச் சமயம் ஹோசிமினுக்கு எதிர் பாராத திசையில் இருந்து மாபெரும் உதவி ஒன்று வந்தது.

"போரை ஆரம்பிப்பது சுலபம்! முடிப்பது தான் கஷ்டம்". இந்த சத்திய வசனம் வியட்நாமிலும் உண்மையானது. "கம்யூனிஸ்ட்டுகளின் கைகளுக்குள் வியட்நாம் போய் விடக் கூடாது" என்பது தான் அமெரிக்காவின் குறிக்கோள்! இதற்காகத் தான் பல்லாயிரம் கிலோ மீட்டர் தள்ளியிருந்த வியட்நாமில் தனது மூக்கை நுழைத்தது! ஆனால், இந்தப் போரில் அது கண்ட ஒரே பலன் மூக்குடைப்பு மட்டுமே!

தெற்கு வியட்நாமில் அமெரிக்கா ஒப்புக்காக ஆட்சியில் அமர்ந்திருந்த கைப்பாவை அரசு, கம்யூனிஸ்ட்டுகளை நசுக்குகிறேன் என்று பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்ற பாகுபாடு இன்றி பொதுமக்களை வீதிகளில் ஓட விட்டு விரட்டி விரட்டிச் சுட்டது, கம்யூனிஸ்ட்டுக்கள் என சந்தேகப்பட்டவர்கள் விசாரணையே இன்றி கொல்லப்பட்டனர். இதற்கு நாட்டில் கடும் எதிர்ப்பு கிளம்ப, அமைதியே உருவான புத்த பிட்சுகள் கூட போராட்டத்தில் குதித்தனர்.

குழந்தைகளிடமே இரக்கம் காட்டாதவர்கள் புத்த பிட்சுகளிடமா இரக்கம் காட்டுவார்கள். இவர்களின் போராட்டமும் மிருக பலத்தோடு நசுக்கப்பட்டது. அதனால் புத்த பிட்சுகள் "தீக்குளிப்பு"என்ற சத்யாக்கிரக ஆயுதத்தைக் கையில் எடுத்தனர்.

நட்ட நடு வீதியில் ஆடாமல், அசையாமல், அலறாமல் உட்கார்ந்த இடத்தில் தங்களைத் தாங்களே எரித்துக்கொண்டனர். இதைப்பார்த்து கலவரம் அடைந்த கைப்பாவை அரசு, புத்த பிக்குகள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட அமெரிக்கா மீது அமெரிக்கர்களுக்கே வெறுப்பு உண்டாயிற்று.

1968 ஜனவரி வியட்நாம் போரில் ஒரு புது திருப்புமுனை! தெற்கு வியட்நாமில் கூடியிருந்த அமெரிக்க படைகள் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் இருந்த சமயம்...... சாதாரண பொது மக்கள் உடை உடுத்தி நாடு முழுவதும் ஊடுருவியிருந்த ஹோசிமினின் கொரில்லாப் படைகள் .... துல்லியமாக தீட்டப்பட்ட திட்டத்தின் படி திடீர் என ஒன்று சேர்ந்து அமெரிக்கப் படைகளையும், அதன் கைப்பாவை அரசையும் எதிர்த்துக் கொலை வெறியோடு தாக்குதல் நடத்தின. இதை சற்றும் எதிர்பாராத அமெரிக்கப் படைகள் தடுமாறின. மின்னல் வேகத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் அமெரிக்க தூதரக அலுவலகத்தைக் கூட கம்யூனிஸ்ட்டுக்கள் கைப்பற்றினர்! அமெரிக்காவால் இந்த அவமானத்தை தாங்க முடியவில்லை. தனது கோபத்தை தணித்துக்கொள்ள அது தனது கட்டுப்பாட்டில் இருந்த கிராமங்களில் எல்லாம் மீண்டும் வெறியாட்டம் ஆடியது. இதில் குழந்தைகள் உட்பட பல பொதுமக்கள் பரிதாபமாகச் செத்தனர்.

இவர்களிடமிருந்து தப்பிக்க பிள்ளைகளோடு காட்டாற்றில் வீழ்ந்தவர்கள் ஜல சமாதி ஆயினர். இந்த எல்லா அவலங்களையும் டி.வி யில் பார்த்த அமெரிக்கர்கள் "ஐயோ" என தலையில் அடித்துக் கொண்டனர்.! அதனால் ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது முறையாக போட்டியிட இருந்த ஜான்சன் போட்டியில் இருந்து விலகி ஓடிவிட வேண்டிய நிர்பந்தம்.

ஜான்சனை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிற்கு போட்டியிட்ட நிக்ஸன் "வியட்நாமில் மேலும் எந்த அவமானமும் அடையாமல் தனது



படைவீரர்களை நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வந்து விடுகிறேன்." என பிரசாரம் செய்தே ஜெயித்தார். என்றாலும், அவராலும், வியட்நாமிலிருந்து தன் துருப்புக்களை உடனடியாக வாபஸ் பெற முடியவில்லை. அதனால் நிக்ஸன் ஒரு நரித்தனம் செய்தார். ஒருபுறம் வியட்நாமிலிருந்து பெரும்பாலான தன் துருப்புக்களை திருப்பி அழைத்துக் கொண்டார்.மறுபுறம் கம்யூனிஸ்ட்டுக்களை ஒடுக்க வடக்கு வியட்நாமிலிருந்து தன் விமானங்களை ஏவினார். இதை அடுத்து இடைவிடாது இருபத்து நான்கு மணி நேரமும் வியட்நாமில் குண்டு மழை பொழிந்தது.

இரண்டாம் உலகப் போரில் தான் பயன்படுத்திய குண்டுகளுக்கு எண்ணிக்கையில் இணையான குண்டுகளை வியட்நாம் மீது அமெரிக்கா தூவியது. இதில் லட்சக்கணக்கானோர் பரிதாபமாக துடிதுடித்து இறந்தனர். இந்த அட்டகாசங்கள் அனைத்தையும் டி.வி யில் பார்த்துப் பதை பதைத்துக் கொண்டிருந்த அமெரிக்கர்களை ஒரு காட்சி உறைய வைத்தது.

1972 மார்ச் ...அமெரிக்க விமானம் எறிந்த நேப்பாம் குண்டு ஒன்றில் ஒரு கிராமமே தீப் பற்றி எரிய .... அதிலே தன் தாய் – தந்தை, சொந்தபந்தங்கள் என எல்லோரையும் கருக விட்டு விட்டு ....தப்பி ஓடி வரும். நிர்வாணச் சிறுமியின் அழுகை அத்தனை பேர் மனதையும் பிசைந்து எடுத்தது.!

"போதும் இந்தக் கொடுமை நிறுத்துங்கள் உங்கள் போரை" என உலகமே ஒன்று சேர்ந்து கூக்குரல் இட்டது. அதனால் வேறு வழியில்லாமல் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தன் துருப்புக்களை வேக வேகமாக திருப்பி அழைத்துக் கொள்ள ஆரம்பித்தார்.

வியட்நாம் அமெரிக்க தூதரகக் கட்டட மாடியிலேயே வந்து ஹெலிகொப்டர்கள் இறங்க போர் நடத்தியவர்கள் சந்தடி இல்லாமல் மூட்டை முடிச்சுக்களை கட்டினர். வியட்நாமில் போர் ஒரு வழியாக ஓய்ந்தது.

இந்தப் போரில் சுமார் ஐம்பதாயிரம் வீரர்களைப் பலி கொடுத்து விட்டு, அமெரிக்க ராணுவம் வெறுங்கையோடு திரும்பியது. வடக்கு வியட்நாமும், தெற்கு வியட்நாமும் ஒரே நாடாக செங்கொடியின் கீழே இணைந்தது. இந்த அபூர்வக் காட்சியைப் பார்ப்பதற்காகவே தன் வாழ்நாளை செலவிட்ட ஹோசிமின், இவ் இணைப்பு நிகழ சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டார். என்றாலும் அந்த நாட்டு மக்கள் அவரை மறக்கவில்லை. ஒன்றாக இணைந்த தங்கள் தேச தலைநகர் சைகோனிற்கு " ஹோசிமின் சிட்டி" என பெயர் சூட்டி மகிழ்ந்தனர். (நன்றி – வாவ் – 2000)

# இறைவனின் அந்தும்

கடலில் நூல் எறிந்தேன் — மீனைத்தான்
பிடிக்க, பாய்ந்து வந்தான் — எமனாம்
காலனவன் — உயிர் தப்ப நான்
ஓட — அடித்திழுத்தான் என்னையும்தான்
கல்லின் மேலும் முள்ளின் மேலும்
முட் கம்பியிலும் என்னைப் பாய்ந்து
இழுத்தான் — இடையினில் விட்டுச்
சென்று — குழந்தைகளைத் —தான்
பறித்தான் பிறவியில் கேட்ட
வரமே — கலியுகம் பிடிக்கலையே
அந்தும் இல்லை என்பதனால்
உங்களைப் பறித்தானே.
உங்கள் உயிர் அந்தும் — என்று
சுனாமியாய்ப் பறித்தானே
ஆறிலும் சாவு நூறிலும் — சாவு
என்பதை உணர்த்திச் — சென்றதே
கலியுகத்தை மறந்திடுவீர்
தெய்வ சொர்க்கம் அடைந்திடுவீர்.

முருகேக சிவராசா



# தேர்தலோ தேர்தல் !

தெற்கில் பெரும்
தேர்தல் புயல்
சிக்கல் ..........
யாரைத் தேர்ந்தெடுப்பது ?
சண்டையா ? சமாதானமா ?
சரியான பாதை எது ?

இனவாதமும் மதவாதமும்
இந்தத் தேர்தலில்
இணைந்திருக்கின்றன
தேசத்தின் எதிரியே
இதுதான் !

சமத்துவந்தான்
சமாதானத்திற்கான
ஒரே ஒரு திறவுகோல்
இல்லையென்றால் .........
பழையபடி
அதே பல்லவிதான் !

வியாசர்

# ஓய்வு

ஓய்வு பெறுகிறார் ஒருவர்
உட்கார
சாய்வு நாற்காலி
சரிவருமா?

அறுபது வயதுதான்
ஆனாலும்
அரசியலில் ஓய்வு என்பது
அதிசயமே!

பதினொரு ஆண்டுகள்
பதவியில் இருந்தவர்
அதிகாரத்தை அனுபவித்தவர்
ஓய்விற்கு
ஆசைப்படுவாரா?

நெல்சன் மண்டேலாவின்
நேர்மை......
இவரிடமா?

தீயின் மத்தியில்
தேசம் !
ஓய்வா?
உட்காரவே நேரம்
இல்லாத போது !

காண்டீபன்